## கழகத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்துள்ள

# 'இல்லத்தரசி' கூப்பன் ரூ.8,000 யாருக்கெல்லாம் கிடைக்கும்?

## கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விளக்கம்!

**சென்னை, மார்ச் 31–**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு தலைவரும், திமுக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–**



கடந்த முறை சட்டமன்றத் தேர்தலை ஒட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளை வழங்கியது. அதில் 404 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், காலை உணவு திட்டம், 'வீடு தேடி மருத்துவம்' போன்ற ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் நிறைவேற்றியுள்ளார்.

**ஒன்றிய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு மறுப்பு!**

மீதமுள்ள 101 வாக்குறுதிகளில், 37 வாக்குறுதிகள் ஒன்றிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மட்டுமே நிறைவேற்றப்படக்கூடியவை என்பதால், அவற்றை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உள்ளது. மீதமுள்ள 64 திட்டங்கள், அந்த பகுதிகளில் உள்ள மக்களின் எதிர்ப்பு மற்றும் நடைமுறை சிக்கல்கள் காரணமாக நிறைவேற்றப்படவில்லை.

ஆனால், மீதமுள்ள அனைத்து வாக்குறுதிகளையும் திராவிட முன்னேற்றக் கழகமும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் நிறைவேற்றியுள்ளனர். அதுமட்டுமல்லாமல், நான் குறிப்பிட்ட காலை உணவு திட்டம், 'தமிழ் புதல்வன்', 'புதுமைப் பெண்', 'நான் முதல்வன்' உள்ளிட்ட பல திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளனர்.

அதோடு, 'பசுமை தமிழ்நாடு இயக்கம்', 'தாயுமானவர் மாணவர் திட்டம்', 'அன்புக் கரங்கள்', மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் வழங்குதல், மகளிர் பெயரில் சொத்து பதிவு செய்யப்பட்டால் முத்திரைத் தாளில் ஒரு சதவீதம் கட்டணக் குறைப்பு போன்ற பல திட்டங்களையும் கொண்டு வந்துள்ளனர். தேர்தல் வாக்குறுதிகளில் இடம்பெறாத பல திட்டங்களையும் நாங்கள் செயல்படுத்தியுள்ளோம்.

இந்த ஆண்டு வரக்கூடிய சட்டமன்ற தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை ஆவலோடு மக்களால் எதிர்பார்க்கப்பட்டது. நேற்று முதலமைச்சர், அந்தத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். பல்வேறு தரப்புகளிலிருந்து பாராட்டக்கூடிய அளவிற்கான ஒரு தேர்தல் அறிக்கையாக அந்தத் தேர்தல் அறிக்கை அமைந்திருக்கிறது.

தேர்தல் அறிக்கை குழு பல மாவட்டங்களுக்கு சென்று அங்குள்ள மக்களை நேரில் சந்தித்து, அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள், AI தளத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்கள், அதுமட்டுமல்லாமல் மின்னஞ்சல், வாட்ஸ் அப் மற்றும் குறுஞ்செய்திகள் வழியாக பெறப்பட்ட தகவல்கள், கோரிக்கைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, கிட்டத்தட்ட 80 ஆயிரம் கருத்துக்களை பெற்று இந்த தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளது.

**வல்லுநர்களுடன் கலந்தாலோசனை!**

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்களுடன் கலந்தாலோசனை செய்து, இந்த தேர்தல் அறிக்கையில் வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியங்கள் என்ன என்பதையும் ஆய்வு செய்து இந்த தேர்தல் அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படக் கூடியவையாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் எங்களிடம் உறுதியாக பணித்திருந்தார். அதன்படி தயாரிக்கப்பட்டதே இந்த தேர்தல் அறிக்கை.

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், அதிமுகவின் தேர்தல் அறிக்கையைப் படிக்க நேரமோ வாய்ப்போ எங்களுக்குக் கிடைக்கவில்லை. யாரும் அதைப் படித்ததாகவும் எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், அதிமுகவின் தேர்தல் அறிக்கையை யாரும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. காரணம், அதில் கூறப்பட்டுள்ள பல விஷயங்கள் நிறைவேற்றப்படுவதில்லை.

அதுமட்டுமல்லாமல், அவர்களின் தேர்தல் அறிக்கையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல திட்டங்களையே மீண்டும் இடம்பெறச் செய்துள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது எந்த திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன, இந்தத் திராவிட மாடல் அரசு எந்த திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் அறியாமல் ஒரு தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அப்படியான நிலையில், அந்தத் தேர்தல் அறிக்கையை காப்பி செய்ய வேண்டிய அவசியம் நிச்சயமாக கிடையாது.

நாங்கள் நிறைவேற்றிய ஒரு திட்டமான மகளிர் உரிமைத் தொகையை 2000 ரூபாயாக உயர்த்துவோம் என்று முதலமைச்சர் அறிவித்த பிறகு, அதிமுகவும் 2000 ரூபாய் வழங்குவோம் என்று கூறி ஒரு தேர்தல் அறிக்கையை எழுதிவிட்டு, தற்போது அதிமுக காப்பி பண்றாங்கன்னு சொல்லும்போது வேடிக்கையாதான் இருக்கிறது.

**பொள்ளாச்சி குற்றவாளிகளை காப்பாற்றிய அ.தி.மு.க.**

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஆட்சி என்றால், பொள்ளாச்சியில் நடைபெற்ற ஒரு பாலியல் குற்றத்துக்கு எஃப்ஐஆர் கூட பதிவு செய்ய முன்வராதது எந்த ஆட்சி? அந்த குற்றவாளிகளை காப்பாற்றுவதற்காக பல முயற்சிகள் செய்தது எந்த ஆட்சி? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு குற்றம் நடந்துவிட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், நியாயம் கிடைக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஒவ்வொரு முறையும் உறுதி செய்து வருகிறார்.

அதனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது விமர்சனம் செய்யக்கூடிய அருகதையோ தகுதியோ அவர்களுக்கு இல்லை. ஆனால், பெண்களின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்வதற்காக இந்த தேர்தல் அறிக்கையில் இன்னும் அதிகமான வாக்குறுதிகளை வழங்கியுள்ளோம்.

"நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். தலைவர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோது தேர்தல் வாக்குறுதியாக கேஸ் அடுப்பு கொடுக்கும் திட்டத்தை அறிவித்திருந்தார். அதை நிறைவேற்றும் போது பல அதிகாரிகள் முதலமைச்சரிடம், 'நீங்கள் எத்தனை பர்னர் உள்ள அடுப்பு என்று சொல்லவில்லை.

**சமையலறையிலிருந்து பெண்கள் விடுதலை!**


அதனால் ஒரு பர்னர் இருக்கும் அடுப்பை கொடுத்தாலே போதும், அரசுக்கு செலவு குறையும்' என்று சொன்னார்கள். அதற்கு முதல்வர் கலைஞர் சொன்ன பதில், 'நான் இதைத் தேர்தல் வாக்குறுதியாக தரவில்லை. இரண்டு பர்னர் இருக்கும் அடுப்பை கொடுத்தால் அவர்கள் வேலையை சீக்கிரமாக முடித்துவிட்டு சமையலறையில் இருந்து அந்தப் பெண்கள் வெளியில் வருவார்கள். வாழ்க்கையில் தங்களுக்கு பிடித்த மற்ற விஷயங்களை செய்யத் தொடங்குவார்கள்.

அதேபோலத்தான் இந்தக் கூப்பன் திட்டமும். சமையலறையில் இருந்து சீக்கிரம் விடுதலை கிடைப்பதற்கான திட்டம்தான் இது. ஒரு வாஷிங் மெஷின் வாங்கும்போது கையில் துவைப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் குறையும். பிரிட்ஜ், மிக்ஸி, கிரைண்டர் போன்றவற்றைப் பயன்படுத்தும்போதும் அவர்களது நேரம் சேமிக்கப்படும். அந்த நேரத்தில் அவர்கள் வேறு வேலைகளைச் செய்ய இயலும். இது இன்னொரு முதலீடு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்தக் கூப்பன் கொடுக்கும்போது 'இந்தப் பொருட்களைத்தான் நீங்கள் வாங்க வேண்டும்' என்ற கட்டாயம் இல்லை. எங்கள் வீட்டில் ஏற்கெனவே ஒரு பிரிட்ஜ் இருக்கலாம். அப்படி இருக்கும்போது நாம் மீண்டும் பிரிட்ஜ் கொடுப்பது அவர்களுக்கு பயனற்றதாக மாறிவிடும்.

அதனால், 'எனக்கு என்ன தேவை? எனது வேலை சுமையை குறைப்பதற்கும், எனது நேரத்தை பயனுள்ள வகையில் செலவழிப்பதற்கும் ஒரு வாய்ப்பைத் தரும் பொருளை நான் தேர்வு செய்கிறேன்' என்று அவர்களே முடிவு செய்யட்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கூறினார்.

---



## அறிஞர் அண்ணாவின் எச்சரிக்கை !

**டி**ல்லி வளருகிறது;
அதன் ஆதிபத்தியம்
ஒரு கொடு வாள் !
அதைத் தடுக்க
வேண்டும்;
இன்றேல்
நம் வாழ்வு
அழியும்;
சுயமரியாதை
பலியாகும்;
சுதந்திரம்
நாசமாகும்;
நாம்
நடை பிணம் ஆவோம் !

**..அறிஞர் அண்ணா.**

---

## சென்னை தென்மேற்கு மாவட்டம்

## தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், **கோ.சு.மணி** (44, 83வது தெரு, அசோக் நகர், சென்னை-600083) அவர்கள் தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 30.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

## தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - | பார்வையாளர் |
|---|---|---|
| மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி | – | இ.பரந்தாமன் |
| திருவண்ணாமலை, செங்கம், கலசப்பாக்கம் | – | டாக்டர் எ.வ.வே.கம்பன் |
| ஆர்.கே.நகர் | – | சுபா. சந்திரசேகர் |
| சங்ககிரி | – | க.பிரபு |
| ஆற்காடு | – | சி.ஆனந்தகுமார் |
| தென்காசி | – | ஜி.எம். மதியழகன் |
| திருநெல்வேலி | – | பேச்சிபாண்டியன் |
| ஆயிரம்விளக்கு | – | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| தியாகராயர் நகர் | – | ஜோயல் |
| கோபிச்செட்டிபாளையம் | – | வி.சி.சந்திரகுமார் |
| கிருஷ்ணராயபுரம் | – | கே.இ.பிரகாஷ் எம்.பி., |
| கிணத்துக்கடவு | – | ஜி.பி.ராஜா |
| கோவை தெற்கு | – | மதுரை பாலா |
| உடுமலைப்பேட்டை | – | இன்பா ரகு |
| வேப்பனஹள்ளி | – | நா.இளையராஜா |
| ஓட்டப்பிடாரம் | – | ப. அப்துல்மாலிக் |
| சைதாப்பேட்டை | – | சைதை சாதிக் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 30.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர்

## அமைச்சர் துரைமுருகன் காட்பாடி தொகுதியில் பிரச்சாரத்தை தொடங்கினார்!

### டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. – கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு!

*காட்பாடி, மார்ச் 31*

*வேலூர் மாவட்டம்,காட்பாடி சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள தி.மு.க. பொதுசெயலாளர் துரைமுருகன் ரெயில் மூலம் சென்னையில் இருந்து காட்பாடிக்கு வந்தார்.*

*அவருக்கு தி.மு.க., தே.மு.தி.க, வி.சி.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட்கள் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

*அங்கிருந்து தொண்டர்களுடன் ஊர்வலமாக வந்த துரைமுருகன் அவர்கள் சித்தூர் பேருந்து நிலையத்திலிருந்து பிரச்சாரத்தை துவங்கினார்.*

*இதில் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், பகுதி செயலாளர்கள் எம்.சுனில் குமார், ஜி.வன்னியராஜா உள்ளிட்டோர் இருந்தனர்.*

*மக்களிடையே தி.மு.க. பொதுசெயலாளர் துரைமுருகன் பேசுகையில், மீண்டும் எனக்கு காட்பாடி தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்துள்ளனர். மகிழ்ச்சியளிக்கிறது.*

*ஒவ்வொரு முறையும் எனக்கு ஆதரவளித்து வாக்களிக்கிறீர்கள். இம்முறை வாக்களியுங்கள் என பேசினார்.*

*நான் மீண்டும் காட்பாடியில் போட்டியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. நான் என் தொகுதிக்கு என்னென்ன செய்தேன் என்பது மக்களுக்கு தெரியும். நான் வெற்றி பெற்ற பின்னர் தொகுதிக்கு செய்ய சில திட்டங்களை வைத்துள்ளேன். வெற்றி பெற்ற பின்னர் அவைகளைச் செய்வேன்.*

*இவ்வாறு அவர் என கூறினார் .*

---

## குஜராத்தில்

## பழங்குடியினர் மீதான தாக்குதல் அதிகரிப்பு!

### ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

*பரோடா, மார்ச் 31-*

*பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலத்தில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் மீதான கொடுமைகள் தீவிரமாகியிருப்பதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.*

*குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தலித்துகள் மற்றும் பழங்குடியினரைச் சந்தித்துப் பேசிய ராகுல் காந்தி, இது குறித்து சமூக வலைதளப் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.*

*2016ஆம் ஆண்டில் உன்னாவில் தலித்துகளுக்கு எதிராக நடந்த சம்பவத்தால் நாடு முழுவதும் பரபரப்பு ஏற்பட்டதாகவும், தலித் இளைஞர்கள் பொதுமக்கள் முன்னிலையில் ஆடை களையப்பட்டு, கொடூரமாகத் தாக்கப்பட்டதாகவும், அப்போது அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் தான் ஆதரவு தெரிவித்ததாகவும் ராகுல் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த சம்பவம் நடந்து 10 ஆண்டுகளாகிவிட்டது, எனினும், பாதிக்கப்பட்ட அவர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்பதும், அவர்களின் காயங்களுக்கு மருந்திடப்படவில்லை என்பதும் மிகவும் துரதிருஷ்டவசமானதாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.*

*குஜராத்தை சேர்ந்த தலித்துகளுடனான உரையாடலின்போது, அங்கு நிலைமை மிகவும் அபாயகரமாகி இருப்பது தெரிய வந்ததாகவும், தலித் நபர் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டதில் 19 இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும், மற்றொருவர் உயிருடன் தீயிட்டு எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றை வெறும் குற்றச் சம்பவங்களாக மட்டும் பார்க்கக் கூடாது; குஜராத்தில் அச்சம், அநீதி கலந்த சூழல் நிலவுகிறது என்பதையே இது காட்டுகிறது என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.*

*குஜராத்தில் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியில் தலித்துகள் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக வெறுப்பு, பாகுபாடு, கொடுமைகள் மேலும் தீவிரமாகி விட்டதாகவும் தன்னைச் சந்தித்த தலித்துகள் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு கடந்த காலத்தைப் போல இப்போதும் ஆதரவாக இருப்பதாகவும், அவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை, அவர்கள் சார்பாக தான் குரல் கொடுப்பேன் என்று ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.*

---

## சென்னை தென்மேற்கு மாவட்டம்

## தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 141-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி, 141-வது வட்டக் கழகச் செயலாளர் துரை அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **கோ.உதயசூரியன்** (121, 4வது பிளாக், காமராஜர் காலனி, தியாகராய நகர், சென்னை-600017.) அவர்கள் 141-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 30.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## சென்னை வடகிழக்கு மாவட்டம்

## திருவொற்றியூர் மேற்குப் பகுதி 3-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி, 3-வது வட்டக் கழகச் செயலாளர் மாணிக்கவேலன்அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **பி.புண்ணியமூர்த்தி** (60/68, முதல் தெரு, அன்னை சிவகாமி நகர், எண்ணூர், சென்னை-600 057.) அவர்கள் 3-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 30.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

விழுப்புரம் தெற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏஜிஎஸ். கணேசன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 30.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23வது வட்டத்தைச் சேர்ந்த என்.மேனகா நித்யானந்தம், என்.சரவணன் - திருவொற்றியூர் மேற்கு பகுதி, 2வது வட்டத்தைச் சேர்ந்த திருமதி கோமதி சந்தோஷ்குமார் ஆகியோர் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 30.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.